ஊரறியாமலே
உண்மைகள் கலங்கும்
ஒரு பெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே
விழுதினை புரியும்
வெடிமருந்தேற்றிய வேங்கையை தெரியும்

சாவினை தோள்மீது தாங்கிய காவிய சந்தண மேனிகளே
உங்கள் ஆவி கலங்கிய அக்கண போரிலே யாரை நினைத்திரோ
நீங்கள் யாரை நினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

வேன்றிடவே கரும் வேங்கைகள் ஆகிய வீரக்கொளுந்துகளே 2
எம்மை கொன்றவர் மீதினில் குண்டெனப்பாய்கையில் என்ன நினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

தாயக தாகங்கள் தாங்கிய நெஞ்சினில் சாவை சுமந்தவரே 2
உங்கள் தேகங்கள் தீயினில் வேகின்ற நேரத்தில் ஆரை நினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

தாலாடு பாடியே தன்முலையூட்டிய தாயை நினைத்தீரோ 2
உங்கள் காலாற தோள் மீது தாங்கிய தந்தையின் கையை நினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

நாளும் விடுதலை தீயில் குளித்திடும் நாயகனை நினைத்தீரோ 2
உங்கள் தோளை தடவியே சென்றிடு என்றவன் சோகம் தனை நினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

சாவினை தோள்மீது தாங்கிய காவிய சந்தண மேனிகளே
உங்கள் ஆவி கலங்கிய அக்கண போரிலே யாரை நினைத்திரோ
நீங்கள் யாரை நினைத்தீரோ